மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மானியத்தை உயர்த்துவதற்கு தற்போது வழியில்லை. இருந்தாலும் மற்ற விவசாயிகளுக்கும் உதவுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்,

காட்பாடி-சித்தூர் சாலை இரயில்வே மேம்பாலம்,

*வினா எண் 151—திரு. எஸ், ஜே. இராமசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள காட்பாடி-சித்தூர் போகும் சாலையில் இரயில்வே மேம்பாலம் பழுதடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அம்மேம்பாலம் எப்போது பழுது பார்க்கப்படும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்,

(ஆ) இம்மேம்பாலத்தினை திரும்பக் கட்டும் பணி தென் பிராந்திய இரயில்வேயின் அறிக்கை கிடைக்கப்பெற்றவுடன் எடுத்துக்கொள்ளப்படும்.

கோமுகி ஆற்றின் குறுக்கே பாலம்.

*வினா எண் 152—திரு. வ. துலுக்காணம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சி தாலுகா தியாகதுருகம் அருகில் நெடுஞ் சாலையில் கோமுகி நதியின் குறுக்கே உள்ள பாலத்தை நிரந்தர போக்குவரத்துக்கு ஏற்ப சீரமைக்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இல்லை.

திரு. வ. துலுக்காணம் : தியாகதுருகம் அருகில் நெடுஞ் சாலையில் கோமுகி நதியின் குறுக்கே உள்ள அந்தப் பாலம் ஒவ்வொரு ஆண்டும் வெள்ளம் வரும்போது அந்தப் பாலத்திற்கு பக்கத்திலுள்ள மண் சாலையில் அரிப்பு ஏற்பட்டு ஒரு மாத காலத்திற்கு மேலாக போக்குவரத்திற்கு தடை ஏற்பட்டு இருந்தது, வெள்ளம் வரும்போது அந்தப் பாலத்தில் போக்குவரத்து செல்ல முடிவதில்லை, மக்கள் செல்ல முடிவதில்லை, அந்தப் பாலம் வெள்ளையன் காலத்தில் கட்டப்பட்டது. தற்போது அந்தப் பாலம் மிக மோசமானதொரு நிலையில் இருக்கிறது. வெள்ளம் வரும்போது அங்கு போக்குவரத்துத் தடை ஏற்படுகிறது. ஆகவே போக்குவரத்து வசதியை ஏற்படுத்த நிரந்தரமான முறையில் அங்கு ஒரு புதிய பாலத்தை அமைத்துத் தர அரசு முன்வருமா?